**2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 05.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சிறப்பு கூட்ட பொருட்கள்**

**1.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு வருவாய் பிரிவு பயன்பாட்டு வாகனம் டி.என்.57.எச்.3034 க்கு என்ஜினை பிரித்து பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து 12.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

1) குமார் ஆட்டோ கேர் - ரூ.64200/-
2) கே.எம்.எ. மோட்டார்ஸ் - ரூ.69050/-

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 6163 / 2020 / இ3)

**அ.குறிப்பு**

1) வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.64200/- க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் முன் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2160 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**2.** திண்டுக்கல் மாநகராட்சியில் உள்ள வரி வசூல் மையத்தில் தற்சமயம் 16 பேட்டரிகள் உள்ளன. அவை பழுதாகி உள்ளதால் அவற்றிற்குப் பதிலாக புதியதாக 16 (65 எச்) பேட்டரிகள் வாங்குவதற்கு 10.11.2020 இல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

1) தன்வின் பேட்டரிஸ் - ரூ.111760/-

3) ஹரி பேட்டரிஸ் - ரூ.123700/-

மேற்கண்ட இரு விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி அளித்துள்ள தன்வின் பேட்டரிஸ் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண். 7832 / 2020 / இ3)

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

2) பணியின் அவசர அவசியம் கருதி தன்வின் பேட்டரிஸ் நிறுவனத்தாருக்கு வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2161 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**3.** இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் T.N.57 BE 2647 மற்றும் T.N.57 BE 2658 கம்பாக்டர் வாகனங்களுக்கு 2020-21ம் தகுதி சான்று முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கும், வாகனங்களின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,56,000/-க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஆறாயிரம் மட்டும்) மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட பணி மனையான TVS சர்வீஸ் செண்டர், மதுரை நிறுவனம் மலம் பணி மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.7560/2020/எச்1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. பொது சுகாதார அவசர அவசியம் கருதி அரசு அங்கீகாரம் பெற்ற TVS சர்வீஸ் செண்டர், மதுரை நிறுவனத்தில் மேற்படி வாகனத்தின் பழுது நிக்கம் மேற்கொள்ளவும், வாகனத்திற்கு தகுதி சான்றிதழ் பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி வாகனத்தின் தகுதிச் சான்று பெறுவதற்காக உத்தேச செலவினம் ரூ.2,56,000/-ஐ வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2162 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**4.**இம்மாநகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனங்கள் (1)T.N.57 BE 2607, (2)T.N.57 BE 2598, (3)T.N.57 BE 2637, (4)T.N.57 BE 2621 மற்றும் T.N.57 BE 2661 ஆகிய வாகனங்களுக்கு 2020-21ம் தகுதி சான்று முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு தகுதி சான்று பெறுவதற்கும், வாகனங்களின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் **ரூ.2,49,000/-**க்கு (ரூபாய் இரண்டு லட்சத்து நாற்பத்தி ஒன்பதாயிரம் மட்டும்) அனுமதி வேண்டி மாமன்றத்தில் பொருள் வைக்கப்படுகிறது (ந.க.எண்.7596/2020/எச்1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2163 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**5.** திண்டுக்கல் மாநகராட்சி உடனிகழ் தணிக்கைப் பிரிவு வடமேற்கு பகுதி சுவர் மிகவும் பழுதடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளது. ஷை கட்டிடத்தின் வடமேற்கு பகுதி சுவரினை சரி செய்யவும், பிற மராமத்துப் பணிகள் மேற்கொள்ளவும் ரூ.7,00,000/- க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) வருவாய் நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 2164 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**6.** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு தெருவிளக்கு பராமரிப்பு வாகனம் TN.57.1709 இன் 12 V – 88 AH பேட்டரி பழுதடைந்துள்ளதால் அதை புதியதாக மாற்றித் தருவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.(**ந.க.எண்.3480 / 2020/ இ 3)**

**அ.குறிப்பு**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2165 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**7.** இம்மாநகராட்சியில் பொது நிதி 2020-21 ன் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு பராமரிப்புப் பணிக்குத் தேவைப்படும் ISI அல்லது ISO தரம் வாய்ந்த மின் சாதனப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 14.10.2020 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.எ.முகமது ரபி | 4.97% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/- க்கான வங்கி செலுத்து ரசீது |
| 2. | ஜிவிஆர் அசோசியேட்ஸ் | 13.02% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/- க்கான வங்கி செலுத்து ரசீது |

(ந.க.எண்.2375 / 2020 / இ 3 )

**அலுவலக குறிப்பு**

1. ரூ.10,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண்.1853, நாள் 17.2.2020 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றதால் விலை விகிதத்தை குறைத்து தருமாறு கூடுலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்திருந்த திரு.எ.முகமது ரபி, ஒப்பந்ததாரரிடம் 15.10.2020ம் தேதிய அறிவிப்பில் கேட்கப்பட்டபோது ஷையார் விலை விகிதத்தினை குறைத்து தர இயலாதென தெரிவித்ததன் காரணமாகவும், பணியின் அவசர அவசியம் கருதியும், மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.97% மதிப்பீட்டை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எ.முகமது ரபி, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலரின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2166 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**8.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு 2020-21ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் முதலியவற்றை வாங்கிக் கொள்ள 2020-21ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ. 45.00 லட்சம் (ரூபாய் நாற்பத்தைந்து லட்சம்) தொகைக்கு உட்பட்டு மேற்படி எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் வாங்கிக் கொள்ள மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.
(ந.க.எண்.8221/2020/டி1)

<u>**அலுவலகக் குறிப்பு**</u>

1. ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கணினி உபகரணங்கள் மற்றும் பல்வகை கணினி ரசீதுகள் அச்சடித்து வழங்க கூட்டுறவு அச்சகங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2167 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**9.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.8009/2016/ஜே-1 நாள் 04.11.2016 மற்றும் 28.06.2017, 29.08.2019 ஆகிய தேதிகளில் நடைபெற்ற ஆய்வுக்கூட்ட அறிவுரைகளின் படியும், அரசு தலைமைச் செயலர், சென்னை அவர்களின் அனைத்து துறை கூட்ட அறிக்கை நாள் 14.03.2019, மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.141/2018/அ6 நாள் 05.04.2019 ஆகியவற்றில் இம்மாநகராட்சி பகுதிகளில் கொசுவினால் பரவக்கூடிய நோய்களை தடுக்கும் பணிகளுக்கு 48 வார்டுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 300 வீடுகளுக்கு 1 நபர் என்ற வீதத்தில் (இம்மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகையான 2,07,307க்கு (2011 சென்சஸ்) உட்பட 54000 குடியிருப்புகளுக்கு மேல் உள்ளதால் 173 நபர்கள் தேவைப்படுகிறது. எனவே, 173 தற்காலிக மலேரியா களப்பணியாளர்களை திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 2018-19ம் ஆண்டு தரவிலைப் பட்டியலின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 296/- என்ற விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் , திரு. ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் என்பவர் மூலமாக பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி பணி ஒப்பந்த காலம் 22.11.2020 உடன் முடிவுறும் நிலையில் உள்ளதாலும், தற்போது மழைக்காலம் தொடங்கி விட்டதால் டெங்கு தடுப்புப் பணிக்கு தற்போது குறைந்த பட்சம் 100 முதல் 110 வரையான பணியாளர்களை வைத்து பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதால் 2 மாதத்திற்காகும் செலவினத் தொகையான ரூ.19,00,000/-க்கு உள்ளாகவே

மேற்கொள்ளும் வகையிலும், , நிர்வாக இடர்பாடுகளை தவிர்க்கும் பொருட்டும் மேற்படி பணி ஒப்பந்த காலத்தினை 23.11.2020 முதல் 22.01.2021 வரை மேலும் 2 மாத காலத்திற்கு ஏற்கனவே இப்பணியினை மேற்கொண்டுவரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம், திண்டுக்கல் ஒப்பந்ததாரருக்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கவும், அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.19,00,000/- இம்மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.7983/2019/எச்2)

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்.

2) பொது சுகாதாரப் பணி மற்றும் மழை காலத்தில் டெங்கு கொசுக்கள் உற்பத்தியினை தடுக்கும் பணியின் அவசர அவசியம் கருதியும் நிர்வாக நலன் கருதியும், 2 மாதங்களுக்கு வழங்கப்பட உள்ள உத்தேச செலவினம் அனுமதிக்குட்பட்ட ரூ.19,00,000/-க்குள் வருவதாலும், 100 முதல் 110 வரையான பணியாளர்களை வைத்தே குறிப்பிட்ட தொகைக்குள் பணி மேற்கொள்ளவிருப்பதாலும் மேலும் 2 மாத காலத்திற்கு ஏற்கனவே இப்பணியினை செய்து வரும் திரு.ராமலிங்கம், PWD கான்ட்ராக்டர், அய்யம்பாளையம் ஒப்பந்ததாரரையே தொடர்ந்து பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2168 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**10.** வடகிழக்கு பருவமழையினைத் தொடர்ந்து உருவாகியுள்ள நிவர் புயல் காரணமாக விழுப்புரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புயல் நிவாரண மீட்புப் பணிகள் மேற்கொள்வதற்காக 25.11.2020ம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையரக தொலைபேசிச் செய்தியில் தெரிவித்ததற்கிணங்க இம்மாநகராட்சியிலிருந்து 3 துப்புரவு ஆய்வர்கள், 3 துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், 2 ஓட்டுநர்கள் மற்றும் 35 தூய்மைப் பணியாளர்கள் உட்பட மொத்தம் 43 நபர்கள், 1லாரி மற்றும் உரிய உபகரணங்களுடன் விழுப்புரம் நகராட்சியில் அயற்பணி அடிப்படையில் புயல் மீட்பு நிவாரணப் பணி மேற்கொள்ள இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.8627/2020/எச்2, நாள்.25.11.2020ன் படி இம்மாநகராட்சியிலிருந்து விடுவிக்கப்பட்டு மேற்கண்ட பணியாளர்கள் விழுப்புரம் நகராட்சிக்கு சென்று பணி மேற்கொள்ள ஆயத்தமான நிலையில் இணை இயக்குநர்(மாந), நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களது அறிவுறுத்தலின் படி அன்றைய தினமே திண்டிவனம் நகராட்சியில் புயல் நிவாரண மீட்புப் பணி மேற்கொள்ளும் பொருட்டு மேற்கண்ட பணியாளர்கள் திண்டிவனம் நகராட்சியில் புயல் நிவாரண மீட்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மேற்கண்ட 43 பணியாளர்களும் விழுப்புரம் நகராட்சிக்கு சென்று அதன் பின்னர் மீளவும் திண்டிவனம் நகராட்சிக்கு மீட்புப் பணி மேற்கொள்ள செல்வதற்கு பேருந்து கட்டணமாக ரூ.17,500/- மற்றும் ரூ.4000/- ஆக கூடுதல்

ரூ.21,500/-ம் செலவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் மீளவும் திண்டுக்கல் வந்து சேர ஆகும் பேருந்து கட்டணம் ரூ.21,500/-ம் ஆக கூடுதல் ரூ.43,000/- பேருந்து கட்டணமாகவும், இதர அத்தியாவசிய செலவினங்களுக்காக ரூ.15,500/-ம் ஆக கூடுதல் மொத்த செலவினத் தொகை ரூ.58,500/-ஐ புயல் நிவாரண மீட்புப் பணியின் அவசர அவசியம் கருதி இம்மாநகராட்சி வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து பிரிவு- 15ன் கீழ் செலவிடப்பட்டதை ஏற்க இம்மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது உத்தரவிற்கிணங்க இயற்கை சீற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கும் பொருட்டு திண்டிவனம் நகராட்சி பகுதிகளில் புயல் நிவாரண பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசர அவசியம் கருதி மேற்கண்ட தொகை ரூ.58,500/-ஐ பிரிவு-15ன் கீழ் செலவினம் செய்ததை இம்மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண்: 2169 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**11.** திருமதி. பி. வனிதா என்பவரால் செயலாளர், அருள்மிகு பழனி ஆண்டவர் பெண்கள் கலை கல்லூரி, பழனி மற்றும் இணை இயக்குநர் (கல்லூரி படிப்புகள்) மதுரை ஆகியோரை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட நீதிமன்ற பேராணை வழக்கு எண். WP(MD) No.842/2014ல் இம்மாநகராட்சி ஆணையரை மூன்றாம் பிரதிவாதியாக உள் சேர்த்து உத்திரவிடப்பட்டதை தொடர்ந்து, மேற்படி வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக திரு. ஜே.லாரன்ஸ் அவர்கள் ஆஜராகியும் வழக்கினை நடத்தியும் கடந்த 11.11.2020 அன்று வழக்கு முடிக்கப்பட்டது.

மேற்கண்ட வழக்கிற்கான வழக்காடல் கட்டணம் ரூ.7500/-ஐ வழக்கறிஞருக்கு வழங்கிட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 8329/2020/எச்3)

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவின தொகை ரூ.7500/-ஐ வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2170 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**12.** திண்டுக்கல் மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட **5** வாகனங்களுக்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பணிக்கு 30.11.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்க்கண்ட 2 ஒப்பந்தப் புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எ ண். | வாகனம் எண். | நிறுவனம் | விலைப் புள்ளி தொகை | நிறுவனம் | விலைப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | TN 57 BE 2607 | குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் | ரூ.49,650/- | கே.எம்.ஏ மோட்டார்ஸ், பைபாஸ் ரோடு, மீனாட்சி நாயக்கன்பட்டி, திண்டுக்கல். | ரூ.54,950/- |
| 2 | TN 57 BE 2598 | | ரூ.49,650/- | | ரூ.54,950/- |
| 3 | TN 57 BE 2637 | | ரூ.49,650/- | | ரூ.54,950/- |
| 4 | TN 57 BE 2621 | | ரூ.49,650/- | | ரூ.54,950/- |
| 5 | TN 57 BE 2661 | | ரூ.49,650/- | | ரூ.54,950/- |

மேற்கண்டவாறு பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள குமார் ஆட்டோ கேர், ஜி.டி.என். ரோடு, திண்டுக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரித்து மாமன்ற அனுமதியை எதிர்நோக்கியும் நிர்வாக நலன் மற்றும் பணியின் அவசர அவசியம் கருதியும் தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பணி உத்திரவு வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.7596/2020/எச்1).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2171 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**13.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான ஆத்தூர் காமராஜர் அணை நீர்த்தேக்கத்தில் பயனற்று மேடாக உள்ள பகுதிகளை ஆழப்படுத்தி அதன் மூலம் கூடுதல் நீ தேக்கம் வகையில் பணிகள் மேற்கொள்ள அரசாணை (நிலை)எண்.109, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாநக2) துறை, நாள்.11.11.2018ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் அணையில் தூர்வாரப்படவுள்ள மண்ணை அகற்ற தினசரி நாளிதழ்களில் ஒப்பந்தபுள்ளி விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்கண்ட தினசரி நாளிதழ்க்கு விளம்பரக் கட்டணம் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நாளிதழின் பெயர் | விளம்பர நாள் | ரசீது எண் / நாள் | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி | தொகை ரூபாயில் |
|---|---|---|---|---|---|
| 1 | EYE dea brand solutions | 28.10.2020 | 2006 நாள்.20.10.2020 | குடிநீர் நிதி | 56,826/- நாள்.04.12.2016 |

(ந.க.எண்.2398/2018/இ2)

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 2172 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

**14.** திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இதில் குடிநீர் குழாய் வைப்புத் தொகை மற்றும் குழாய் பராமரிப்புக் கட்டணம் மாநகராட்சியால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. கீழ்கண்ட விண்ணப்பதாரர் குடிநீர் குழாய் வைப்புத் தொகையினை இருமுறை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார். அதற்கான இரசீதை இணைத்துள்ளார். எனவே கூடுதலாக செலுத்திய தொகையினை திரும்ப வழங்கிட கோரியுள்ளார்.

| வ.எண். | பெயர்/முகவரி | புதிய குடிநீர் வைப்புத் தொகை மற்றும் குழாய் பராமரிப்பு கட்டணம் செலுத்தியது. ரூ. | இரசீது எண்/தேதி | தவறுதலாக செலுத்திய வைப்புத் தொகை ரூ. | இரசீது எண்./தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.சி.ராமன் த/பெ.சின்னு, 53/29, திருவள்ளுவர் தெரு, குடைபாறைப்பட்டி, திண்டுக்கல் | 14548 | 10634 நாள்.20.09.18 | 10000 | 1552510 நாள்.04.12.16 |

எனவே, மேற்கண்டவாறு மனுதார் கூடுதலாக செலுத்திய குடிநீர் வைப்புத் தொகையில் குறைவான தொகை ரூ.8000/- காசோலையாக திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2206/2016/இ2)

**<u>அலுவலகக் குறிப்பு ..</u>** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 2173 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

15.திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ரூ. 41.23 கோடி மதிப்பீட்டில் பணிகள் முடிக்கப்பட்டு பிப்ரவரி 2013 – முதல் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4775/UGSS-1/ 2018, நாள். 26.08.2018-ல் தமிழ்நாடு நகர்புறச் சேவை கட்டமைப்பு நிதி இணையத்தின் மூலம் (TUFIDCO Interest Free Loan) வட்டியில்லா கடன் அடிப்படையில் 9434 வீட்டு இணைப்புகளுக்கு பாதாளச்சாக்கடை இணைப்புகள் வழங்குவதற்கு மதிப்பீடுத்தொகை ரூ. 450.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 18281/2016/DOI, நாள். 28/02/2018-ல் ரூ. 450.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இப்பணிக்கு திரு. என். ராஜசேகரன் ஒப்பந்ததாரர் மூலம் பணியினை மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வரும் நிலையில், இந்நகரில் ஏற்கனவே பாதாள சாக்கடை பைப் லைன் பதிக்கப்பட்டு, விடுபட்ட குறுக்கு சந்துகளில் உள்ள குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் பொருட்டு பைப் லைன் மற்றும் ஆய்வு தொட்டிகள்(MAN HOLES) அமைத்து குடியிருப்புகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மேற்படி பணிக்கான கூடுதல் இனங்களுக்கு (SUPPLEMENTAL WORKS) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட நடவடிக்கை நாள். 08.02.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ள விபரத்தின் அடிப்படையில், தற்போது முதன்மை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களிடம் கூடுதல் இனங்களுக்கு ஒப்புதல் பெறுவதற்கும் மேலும், இந்நகரில் பல இடங்களில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள ஆய்வு தொட்டியின் மட்டத்திற்கு புதியதாக பைப் லைன் பதித்து பணி மேற்கொள்ள LEVEL PERMIT ஆகாத நிலையில் இருப்பதால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள 9434 குடியிருப்புகளில் தற்போது 6889 குடியிருப்புகளுக்கு மட்டும் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்கும் நிலையில் உள்ளது.

எனவே, தற்போது நகரில் ஏற்கனவே பைப் லைன் பதிக்கப்பட்டு விடுப்பட்ட பகுதிகளில் சுமார் 2.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு (ஆய்வு தொட்டிகள் உட்பட) புதியதாக பைப் லைன் பதித்தல் பணியும் மற்றும் 6889 எண்ணிக்கை குடியிருப்புகளுக்கு மட்டுமே பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்க இயலும் என்ற நிலையில் உள்ளதால், கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிக்கு திருத்திய மதிப்பீடு தொகை ரூ. 450.00 இலட்சத்திற்கு தற்போது விரிவான திட்ட மதிப்பீடு அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | பணியின் விபரம் | திருத்திய மதிப்பீடு தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 6889 குடியிருப்புகளுக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணிகள், விடுப்பட்டப் பகுதியில் 2.00 கி.மீ நீளத்திற்கு பைப்லைன் மற்றும் ஆய்வுத்தொட்டிகள் 77 எண்ணம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் | 450.00 |

மேற்படி, பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள திருத்திய மதிப்பீட்டு தொகை ரூ. 450.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுககு கருத்துரு சமர்பிக்க மாமன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.**(ந.க.எண். 2568/2012/இ4 (பா.ச.தி))**

<u>அலுவலக குறிப்பு..</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2174 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

16.திண்டுக்கல் மாநகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் செயல்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கான ஒப்பந்தம் ஜனவரி 2021 இறுதிக்குள் முடிவடைவதால் மேற்படி, சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவதற்கு போதிய

பணியாளர்கள் இம்மாநகராட்சியில் இல்லாததால் 01.02.2021 முதல் 31.01.2023 வரை இரண்டு ஆண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்ததாரரை நியமிக்க ஒப்பந்தப்புள்ளி கோரவும் மற்றும் மேற்படி ஆண்டிற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் நிறுவனத்திற்கு தொகை வழங்க (TWAD &PWD SOR-2020-21) விலை விகித அடிப்படையில் மதிப்பீடு ரூ. 37.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. மேற்படி, செலவீனத்திற்கு ஒப்பந்தபுள்ளி கோரவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண்**.11411/2018/**இ**4 (பா.ச.தி))

<u>அலுவலக குறிப்பு..</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2175 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

---

17,திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான நகர் நல மையங்கள், பள்ளிக் கட்டிடங்கள், மாநகராட்சி அலுவலக கட்டிடம், விருந்தினர் மாளிகை ஆகியவற்றில் உள்ள குளிர்சாதன இயந்திரங்களுக்கான வருடாந்திர பராமரிப்புக் காலம் 30.6.2020 உடன் முடிவடைவதால் 2020-2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்புப் பணி மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6,00,000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. **ந.க.எண்.8820 / 2020/ இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 2176 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</u>**

18.திண்டுக்கல் மாநகராட்சியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் உபயோகத்திற்கு இரண்டு எண்ணம் (Jonson Lifts) ( 10 persons / 680 kgs / cap) தரை தளத்தில் இருந்து இரண்டு மேல் தளங்களுக்கும் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட இரண்டு மின் தூக்கிகளுக்கு 2020-21 ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்புப் பணியை மேற்கொள்ள ரூ.2,00,000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(**ந.க.எண்.8819 / 2020/ இ 3)**

**<u>அ.குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2) மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2177 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

19. இம்மாநகராட்சி ஒப்பந்ததாரர்களின் பட்டியலில் 01.04.2015 முதல் 30.06.2017 வரை பிடித்தம் செய்யப்பட்ட சேவை வரி மற்றும் அதற்குண்டான வட்டி தொகையை செலுத்தக் கோரி எஸ். குமரன், ஒப்பந்ததாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இம்மாநகராட்சி ஆணையாளர் அவர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண். W.P.(MD) No. 13935/2020ல் தொடரப்பட்ட வழக்கில் இம்மாநகராட்சி சார்பாக திரு.ஜே. லாரன்ஸ், மாமன்ற வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை அவர்களை ஆஜராகிட கேட்டுக்கொள்ளவும் மற்றும் மேற்கண்ட வழக்கிற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.7,500/-க்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.8626/2020/பி3)

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தொடர் நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2178 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

20. இம்மாநகராட்சியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி. அ. ஈஸ்வரி என்ற சாந்தி என்பவர் தனது கவர் உடல் நலக் குறைவு காரணமாக காலஞ்சென்றுவிட்டதால், பெரியகுளத்தில் தனது தாயாரையும், தனது குழந்தையையும் பார்த்துக்கொள்ள ஏதுவாக தேனி அல்லிநகரம் நகராட்சிக்கும், தேனி அல்லிநகரம் நகராட்சியில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திருமதி. க. பாமினி என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக திண்டுக்கல் மாநகராட்சிக்கும் மனமொத்த பணியிட மாறுதல் கோரியுள்ளனர்.

மேற்கண்ட தனியர்களின் மனமொத்த பணியிட மாறுதல் விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அரசிற்கு அனுப்பிட மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.7240/2018/சி1)**

<u>**அலுவலக குறிப்பு..**</u>

மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**தீர்மானம் எண்: 2179 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**2020ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ம் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 05.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சிறப்பு கூட்ட பொருள்**

**1**. திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-2021 (SRP 2020- 21) ன் கீழ் ரூ.15.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 20557 / 2020 / இ3, நாள் 11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப் பெற்றுள்ளது.

| மாநகராட்சியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட மானிய நிதி (ரூ.கோடியில்) | மாநகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| திண்டுக்கல் | 15.00 | 13.50 | 1.50 |

எனவே மேற்படி வரப் பெற்ற கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றி நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | பணி விபரம் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ ) | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1,2,3 மற்றும் 4 இல் கருணாநிதி நகர் மெயின் ரோடு, ஆர்.எம்.காலனி 2, 3, 4, குறுக்குத் தெருக்கள், ஆர்.எம்.காலனி 12 வது குறுக்குத் தெரு, கோவில தெரு மற்றும் சிவாஜி கணேசன் நகர், ஆர்.எம்.காலனி 11 வது குறுக்குத் தெரு, அசோக் நகர் 3வது தெரு, முருகன் பள்ளி சாலை, சலவைத் துறை, கிழக்கு இராமநாதபுரம் எஸ்கேசி'ஸ் சாலை, ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 3.870 | 6.00 & 3.60 | 167.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண்.5,6,7, 8 மற்றும் 9 இல் எம்விஎம் நகர் 2, 3, 4, 5 வது தெருக்கள், 4, 5, 6 இணைப்பு சாலைகள் மற்றும் பாலாஜி நகர், 2வது தெரு, கணபதி அக்ரஹாரம் குறுக்குத் தெரு, கிருஷ்ணாராவ் 2வது குறுக்குத் தெரு, சரஸ்வதி காலனி மற்றும் நாராயண நகர்,சமயபுரம் காளியம்மன் கோவில் தெரு மற்றும் பள்ளிவாசல் தெரு, காளிமுத்து பிள்ளை குறுக்குத் தெரு, நாயக்கர் புதுத் தெரு, சொசைட்டி தெரு, நந்தவனம் சாலை, சத்தியமூர்த்தி நகர் ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 4.625 | 6.00 & 3.60 | 190.00 |
| 3 | வார்டு எண்.10, 11, 12, 13, 14, 15 மற்றும் 16 இல் செல்லாண்டியம்மன் கோவில் தெரு, லைன் தெரு, லைன் தெரு 4வது தெரு, கோட்டைக்குளம் குறுக்குத் தெரு மற்றும் விஏஓ அலுவலக சாலை, மாலைகட்டி சந்து, கிருஷ்ணய்யர் சந்து, வி.எம் சந்து, ரோமன் மிசின் 1, 2, 3 வது சந்து மற்றும் குமரக் கோனார் சந்து, கோபால் நகர் விஸ்தரிப்பு , சன்னாசி சேர்வை சந்து, மீனாட்சி மகால் சந்து, குமரன் திருநகர் மெயின் ரோடு, லெட்சுமி சுந்தரம் காலனி, ரவுண்ட் ரோடு புதூர், ரவுண்ட் ரோடு கம்பர் சந்து ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 4.120 | 8.00 & 4.00 | 196.00 |
| 4 | வார்டு எண்.16, 17, 18, 19, 20, 21, 22 மற்றும் 23 இல் ரவுண்ட் ரோடு புதூர் மெயின் ரோடு, தெய்வசிகாமணிபுரம், சுக்கான் மேடு, வி.எம்.ஆர். பட்டி, இபி காலனி,தெரசர் சந்து, ஜான் பிள்ளை சந்து, வீரபாண்டியம்மன் கோவில் தெரு மற்றும் குழந்தை வேலன் சந்து, பாண்டியா பிள்ளை தோட்டம் 2, 3 மற்றும் 5வது சந்து, பாண்டியா பிள்ளை தோட்டம் 1 மற்றும் 4வது சந்து, முத்தழகுபட்டி தெற்கு மற்றும் மேற்கு தெரு ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 3.650 | 5.00 & 4.00 | 199.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண்.23, 24, 25, 26, மற்றும் 27 இல் செபஸ்தியார் கோவில் தெரு, முத்தழகுபட்டி மேற்கு தெரு, டிவிஏ நகர் 3வது தெரு, அல்லாபிச்சை தெரு, மதார்ஷா ராவுத்தர் தெரு, மக்கான் தெரு பிரதான சாலை மற்றும் குறுக்கு தெரு, சட்டாம் பிள்ளை தெரு, கோவிந்தசாமி பிள்ளை சந்து, வடமலை பிள்ளை சந்து, நாராயண பிள்ளை சந்து, அரிசிக்காரத் தெரு, மூக்கன் ஆசாரி சந்து, ஜண்டா மரம் சந்து மற்றும் மக்கான் தெரு,பெரியார் நகர்,.நெட்டுத் தெரு, சிதம்பரனார் தெரு, ஆக்னேஸ் மேரி தெரு, பாறைமேட்டுத் தெரு மற்றும் செயிண்ட் சேவியர் தெரு ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 4.580 | 5.00 & 3.00 | 187.00 |
| 6 | வார்டு எண்.28, 29, 30, 31, 32, 33 மற்றும் 34 இல் காளியம்மன் கோவில் தெரு, சேனியர் தெரு, அழகர்சாமி தெரு, நாகல்புதூர் 5வது குறுக்குத் தெரு, போடிநாயக்கன் பட்டி, ரவுண்ட்ரோடு புதூர், மேற்கு மரியநாதபுரம், கோவில் தெரு கிழக்கு மரியநாதபுரம், துர்க்கை அம்மன் கோவில் தெரு, வினோபாஜி நகர், ஐஸ்வர்யா நகர் ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 4.135 | 4.50 & 3.00 | 192.00 |
| 7 | வார்டு எண்.34, 35, 36, மற்றும் 37 இல் ராஜலெட்சுமி நகர், குருநகர், பர்மா காலனி, பாலாஜி நகர், அபிராமி நகர், அண்ணா நெசவாளர் காலனி, சீனி ராவுத்தர் தெரு, சாஸ்திரம் பால்சாமி அய்யர் சந்து, அப்பியர் சந்து, சேலாங்கேணி சந்து, சந்தனக் கோனார் சந்து, முனியப்பன் கோவில் தெரு, புவனேஸ்வரி அம்மன் கோவில் தெரு, நேதாஜி நகர் 7வது தெரு ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 3.140 | 4.50 & 3.00 | 187.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | வார்டு எண். 37, 38,39, 40, 41, 44, 46 மற்றும் 48 இல் சிவமுருகன் காலனி 1வது தெரு, சிவமுருகன் காலனி 2வது தெரு, கேபி நகர், டிவிஏ நகர் 2வது தெரு, கவுண்டர் சத்திரம் தெரு, சிக்கந்தர் சாகிப் தெரு, எம்டிஎஸ் காலனி 1, 2 மற்றும் 4வது தெருக்கள், பாறைப்பட்டி மெயின் ரோடு, மணக்காயி அம்மன் கோவில் தெரு, யூசுப்பியா நகர் மற்றும் கரீம் நகர், சிகேசிஎம் காலனி, மருத்துவர்சங்கத் தெரு மற்றும் குறுக்குத் தெருக்கள், போஸ்டாபீஸ் 2, 3 மற்றும் 4வது தெருக்கள், பாண்டியன் நகர், சேமியா கம்பெனி தெரு ஆகிய பகுதிகளில் தார் தளம் / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 3.695 | 4.50 & 3.50 | 182.00 |
| | **மொத்தம்** | **31.815** | | **1500.00** |

**( ந.க. எண். 3716 / 2020/ இ4 )**

**அ.குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண்: 2180 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**